Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, JULY 30 2024

செவ்வாய்க்கிழமை ஜூலை 30, 2024 | ஒளி: 10 கதிர் 017 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# மொட்டு தனிவழி: ரணிலை கைவிட்டது



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தாமரை மொட்டுச் சின்னத்தின் கீழ், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

கொழும்பு  விஜயராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், திங்கட்கிழமை (29) மாலை இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் குழு சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சின்னத்தின் கீழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்க தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்காது என்றார்.

கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக செயற்படுவோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.



## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்

# "தகனத்தை விசாரிக்குக"

## முஸ்லிம் எம்.பி க்களிடம் கோரிக்கை

நூருல் ஹுதா உமர்

தகனம் தொடர்பான தீர்மானத்தை எடுத்த குழு உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் "பாராளுமன்றத் தெரிவுக்குழுவை" நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அநீதியான சம்பவத்தை செய்த குழுவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு சபாநாயகரிடம் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மத்தியில் மந்தபோசனம்



மத்திய மாகாணத்தின் கண்டி மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட 2,142 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 'அரகலய'வில் ஜனாதிபதி வேட்பாளர்



அரகலய போராட்டக்காரர்கள் இணைந்து உருவாக்கியுள்ள மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளராக சட்டத்தரணி நுவான் போபகே நியமிக்கப்படுவார்

தொடர்ச்சி P2


# நானும் தயார்



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனு இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கட்சி வாய்ப்பு வழங்கினால் தயார் என்றார்.

# ரூ. 1.4 பில்லியன் கோரும் தபால்



ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் திணைக்களத்தின் செலவினங்களைக் கணித்து, 1.4 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதற்கான விபரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# ஜீவனை கைது செய்ய உத்தரவிடவில்லை

## நீதவான் அறிவிப்பு: ஓகஸ்ட் 26க்கு ஒத்திவைப்பு

ஆ.ரமேஸ்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில், திங்கட்கிழமை (29) ஆஜராகி இருந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஷான் குலத்துங்க ,பெருமாள் இராஜதுரை மற்றும் சிவன் ஜோதி யோகராஜா ஆகியோரின் ஊடாக நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட நகர்த்தல் மனுவின் மூலமாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் மன்றில் ஆஜராகியிருந்தார். தொடர்ச்சி P2

# விஜயதாஸவை வரவேற்று வாழ்த்தினார் ஜீவன்



தனது அமைச்சுப் பதவியை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ராஜினாமா செய்ததை வரவேற்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமைச்சுப் பதவி துறந்தமை தெரிந்த விடயமாகும் என்றார்.

எவ்வாறாயினும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்து விலகி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தருணத்தில் அமைச்சுக்கள் சார்ந்த வரப்பிரசாதங்களை பயன்படுத்த முடியாது என்றார். தொடர்ச்சி P2



# நாமலுக்கு எதிராக பந்துல முறைப்பாடு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக அமைச்சர் பந்துல குணவர்தன முறைப்பாடு செய்துள்ளார் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு எவ்வித அறிவித்தலும் வழங்காமல் ஹோமாகம பொதுஜன பெரமுன கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக பந்துல குணவர்தன ஹோமாகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2



# "கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதா செயலிழக்கச் செய்வதா"

ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் 21ஆம் திகதிக்கு அப்பால் வேறொரு தினத்தில் நடத்த தாம் தயாராக இல்லை எனவும், ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்தத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஒரு அங்கம் எனவும் அதனை மீற இடமளிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



# வி.ஐ.பி பாதுகாப்புக்கு 583 கோடி ரூபாய் செலவு

அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் அதி முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கு ( விஐபி) கடந்த ஆண்டு 583 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# நீதியமைச்சர் இராஜினாமா



நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு திருத்தம் அமைச்சுகளின் பொறுப்புக்களில் இருந்தும் தான் இராஜினாமா செய்துள்ளதாக முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். தொடர்ச்சி P2

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி சிறுவன் பலி

நீச்சல் தடாகத்தில் மூழ்கி 7 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், அவரது மூத்த சகோதரரும் அதே நீச்சல் குளத்தில் மூழ்கி கவலைக்கிடமான நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “தகனத்தை விசாரிக்குக”

ஜனாஸாக்களை தகனம் செய்வது தொடர்பான தீர்மானத்தை எதிர்த்து முஸ்லிம் சமூகத்துக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் கோரியுள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித்தலைவர்கள், அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜரொன்றையும் அவர் அனுப்பியுள்ளார். அந்த மகஜரில் மேலும், உடல் உறுப்புகளை தகனம் செய்தல் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்வது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள புதிய சட்ட விதிமுறைகள் மற்றும் கோவிட் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்றன.

அங்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட “பாராளுமன்றத் தெரிவுக்குழு” போன்று ஜனாஸா எரிப்பை விசாரிக்கவும் “பாராளுமன்றத் தெரிவுக்குழு” வேண்டும் என்று முஸ்லிம் எம்.பி.க்கள் கூட்டு கோரிக்கையை இதுவரை முன்வைக்காமாய் வருத்தமளிக்கிறது.

உடல்களை தகனம் செய்ய திட்டமிட்ட குழுவுக்கு பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது நாட்டுக்கு நல்லது.

இந்த தகனம் எமது நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்தது என்பதையே உணர்த்துகின்றன. அந்த அநியாயம் நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் முஸ்லிம் சமூகத்தின் இதயங்களைக் கிழிக்கும் வகையில் ஒரு கருத்தியல் ஆயுதமாக அரசியல் மேடையில் உள்ளது.

அந்த சித்தாந்த ஆயுதத்தை பயன்படுத்தும் எந்த அரசியல் தலைவர்களும் தகனம் செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்களை ஒரே இடத்தில் கூட்டி அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்குப் பதிலாக அல்லது உடைந்த இதயங்களை அணைப்பதற்கு பதிலாக, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அவர்களின் இதயங்களை இன்னும் கொதிப்படைய செய்கிறார்கள்.

எனவே நாங்கள் உங்களுக்கு முன்மொழிந்த “பாராளுமன்றத் தெரிவுக்குழு” மூலம் வெளியிடப்படும் அறிக்கைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களின் குடும்பங்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளில் தகனம் செய்த குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட “ஒரு நாடு ஒரு சட்டம்” ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் பதவியை நான் ராஜினாமா செய்த போது நான் எழுதிய கடிதத்தில், கொவிட் சடலங்களை தகனம் செய்வது குறித்து கேள்வி எழுப்பியிருந்தேன். நான் எழுதிய ராஜினாமா கடிதம் மற்றும் “06/23/2024” அன்று நான் எழுதிய கடிதம் “ஜனாதிபதி ஆணைக்குழு” கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு முழு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் சார்பாக நான் எழுதிய கடிதமும் எனக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதத்தில் திருப்தி அடைய முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# நீதியமைச்சர் இராஜினாமா

நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு திருத்தம் ஆகிய அமைச்சு பொறுப்புக்கள் விஜயதாஸ ராஜபக்ஸ வசம் காணப்பட்டன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக, விஜயதாஸ ராஜபக்ஸ உத்தியோகப்பூர்வமாக அறிவித்த நிலையில், தான் வகித்த அமைச்சு பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

# நாமலுக்கு எதிராக பந்துல முறைப்பாடு

நாமல் ராஜபக்ஷ, ஒழுக்கத்தை மீறியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு இது போன்ற விஷயங்களில் தம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது என பொலிஸார் கூறியுள்ளனர்.

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி சிறுவன் பலி

வெரெல்லகம, குருதுகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் மிஸ்ஜான் என்ற சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் .கண்டியில் உள்ள விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்துடன் ஞாயிற்றுக்கிழமை (28) அன்று விடுமுறையை கழிப்பதற்காக இந்த விடுதிக்கு வந்த நிலையில் முற்பகல் 11 மணியளவில் நீச்சல் தடாகத்திற்கு அருகில் தனியாக இருந்த போது நீச்சல் குளத்தில் அச்சிறுவன் விழுந்துள்ளார் .

அதை கண்ட அவரது மூத்த சகோதரன் நீச்சல் தடாகத்தில் குதித்து தனது தம்பியை காப்பாற்ற முயன்ற போது அவரும் நீரில் மூழ்கியுள்ளார் .

ஆபத்தான நிலையில் இருந்த இளைய சகோதரர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதுடன், மூத்த சகோதரன் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது .

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டி தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜீவனை கைது செய்ய உத்தரவிடவில்லை

நானு ஓயா உடரதல்ல தோட்டத்தில் கோப்பி பயிரிடுவது தொடர்பில் அத்தோட்ட மக்களுக்கும்,தோட்ட நிர்வாகத்திற்கு இடையில் (30.05.2024) ஏற்பட்டிருந்த தொழிற்சங்க பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண நுவரெலியா மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்திற்கு ஜீவன் தொண்டமான் வருகை தந்திருந்தார்.

இதன்போது இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டவில்லை. இந்நிலையில், தான் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட போவதாக ஜீவன் தொண்டமான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அதேநேரத்தில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் நுவரெலியா பீட்று தோட்ட தொழிற்சாலைக்கும் சென்றிருந்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் அங்கு தொழிற்சாலை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தார், பீட்று தோட்ட அதிகாரிகளை அறையொன்றில் வைத்து பூட்டினர் மற்றும் தொழிற்சாலை ஊழியர்களை மிரட்டினார் என மூன்று குற்றச்சாட்டுகளை சுமத்தி பீட்று தோட்ட அதிகாரியால் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் (01.06.2024) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ,காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி. சக்திவேல்,முன்னாள் நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் மற்றும் தொழிலுறவு அதிகாரி லோகதாஸ் ஆகிய நான்கு பேரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தது.

# “கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதா செயலிழக்கச் செய்வதா”

அத்துடன், அரசியலமைப்பின் 104ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு பூரண ஆதரவை வழங்குவது அனைவரினதும் பூரண கடமை எனவும் தெரிவித்தார்.

ஹோமாகம பஸ்தரிப்பு நிலைய வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற ‘ஜெயகமு ஸ்ரீலங்கா’ கொழும்பு மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது,

நாம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு வந்திருக்காவிட்டால் இன்று மக்களுக்கு இவ்வாறான சலுகைகள் கிடைத்திருக்காது. வெளிநாட்டில் இருந்து திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் ஆரம்பிக்க உதவ வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. அன்று நீங்கள் செய்த சேவையினால் தான் இன்று நாட்டு மக்களுக்கு இவ்வாறான நிவாரணங்களை வழங்க முடிந்துள்ளது.

நாடென்ற வகையில் எம்மால் மீண்டும் எழுச்சி பெற முடியாது என்று சிலர் நினைத்தார்கள். தேர்தலை நடத்த முடியாது போகும் என்றனர். சர்வாதிகார நிலை உருவாகும் என்றனர். தற்போது தேர்தலை நடத்துகிறோம். இன்னும் சிலர் தேர்தலை நான் ஒத்திவைக்கப் போவதாக கூறினார்கள். தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக முதலில் சென்று கட்டுப்பணம் செலுத்தினேன்.

இந்த நெருக்கடி நிலையில் என்ன நடக்கும் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பொலிஸ்மா அதிபரை நியமித்த முறை தவறானது என்று கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவது அவசியமானது. அதன்படி, சம்பிரதாய முறைப்படி மேல்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது. இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் அதேநேரத்தில், பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்படுவதாக உயர் நீதிமன்றம் அறிவித்தது. தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உத்தரவு வழங்கப்பட்டதாக வெளிப்டையாக தோன்றலாம்.

இந்த விடயம் தொடர்பில் மறுநாள் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார். அந்த சமயம் சபாநாயகர் பிரசன்னமாகியிருக்கவில்லை. சபாநாயகர் வந்ததும் பிரதமர் அது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அரசியலமைப்பு பேரவை பாராளுமன்றத்திற்கே சொந்தமானது. எனவே அரசியலமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை நீதிமன்றம் ஆராய முடியாது எனவும் இந்த நியமனம் சட்டபூர்வமானது எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

நியமனம் சட்டவிரோதமானது என்றும் அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. மறுபுறம், இது சட்டபூர்வமானது என்று பாராளுமன்றம் அறிவித்துள்ளது. செப்டம்பர் 21ம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பிரச்சினையாக மாறலாம். எனவே, இது குறித்து மகாசங்கத்தினருடன் கலந்துரையாடினேன். தேர்தல் ஆணைக்குழுவுடனும் ஆராயப்பட்டது. இதற்குத் தீர்வுகாண வேண்டும் என அனைவரும் தெரிவித்தார்கள். இன்றேல் இதனால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜூலை 17 முதல் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைத்தது. இந்தத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு முழு ஆதரவை வழங்குவது நம் அனைவரின் கடமையாகும்.

# மத்தியில் மந்தபோசனம்

2023ஆம் ஆண்டுடன் மத்திய மாகாணத்தில் நிலவும் போசாக்கின்மை நிலைமை தொடர்பில் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அணுகல் சட்டத்தின் பிரகாரம் மாகாண சுகாதார திணைக்களம் விடுத்துள்ள தகவலுக்கான கோரிக்கைக்கு வழங்கப்பட்ட தகவலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் வழங்கிய தகவலின்படி, மாகாணத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட 2142 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர், 15,920 குழந்தைகள் மிதமான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 27,812 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் அதே தகவலில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 970 சிறுவர்களும், மாத்தளை மாவட்டத்தில் 461 குழந்தைகளும், நுவரெலியா மாவட்டத்தில் 711 குழந்தைகளும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 7,626 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 3,716 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 4,588 பேரும் மிதமான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் 11,044 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 4,051 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 12,717 பேரும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில், கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை கண்டி மாவட்டத்தில் அக்குறணை சுகாதார அதிகாரி பிரிவில் இருந்தும், 68 யட்டிநுவர சுகாதார அதிகாரி பிரிவில் இருந்தும், 67 மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல சுகாதார அதிகாரி பிரிவில் 61 மற்றும் வில்கமுவ சுகாதார அதிகாரி பிரிவு 61 இல் பதிவாகியுள்ளது. yen இது தெரிவிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் அதிகளவான ஊட்டச்சத்து குறைபாடுள்ள சிறுவர்கள் கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 89 பேரும் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 84 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்த புள்ளிவிபரங்களின்படி நுவரெலியா மாவட்டத்தில் சிறார்களுக்கு ஊட்டச்சத்தின்மை அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

# ‘அரகலய’வில் ஜனாதிபதி வேட்பாளர்



கொழும்பு, பொது நூலகத்தில், திங்கட்கிழமை (29) நடத்திய விஷேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே,

லஹிரு வீரசேகர இந்த அறிவிப்பை விடுத்தார்.

கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியில் கல்வி பயின்ற நுவன் போபகே கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்றார்.

2022 காலி முகத்திடல் போராட்டம் உட்பட பல மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தவர்.மக்கள் போராட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

# ரூ. 1.4 பில்லியன் கோரும் தபால்

சாதாரண தபால், பதிவுத் தபால், எழுது பொருட்கள், போக்குவரத்து, நிர்வாகக் கட்டணம் உள்ளிட்ட பல செலவினங்களுக்காக இந்த மதிப்பீடு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த மதிப்பீடு ஒரு முன்னறிவிப்பு மட்டுமே என்பதால், கோரப்பட்ட பணத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வி.ஐ.பி பாதுகாப்புக்கு 583 கோடி ரூபாய் செலவு

அறிக்கையின்படி, 2018 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் உயரடுக்கு மெய்க்காப்பாளர்களுக்கான ஆண்டு சராசரி செலவு 434 கோடி ரூபாயாகும்.

எனவே, விஐபிகளின் பொலிஸ் மா அதிபர்களின் சுற்றறிக்கைக்கு வெளியே இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலவு குறைந்தவை அல்ல என்பதை கணக்காய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

# விஜயதாஸவை வரவேற்று வாழ்த்தினார் ஜீவன்

எனவேதான், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆளும் கட்சி சார்ந்தவர்களாகவோ எதிர்க்கட்சியினை சார்ந்தவர்களாகவோ அல்லது சுயாதீன வேட்பாளர்களாகவோ இருப்பினும் தனது அமைச்சு பொறுப்பிலிருந்து விலகி தேர்தலில் போட்டியிடுவதினை நான் வரவேற்கின்றேன் அதேவேளை வெற்றிப்பெறவும் வாழ்த்துகின்றேன் என தெரிவித்தார்.

# கழிவுநீர் விடுவது தடை

எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடி வீதிகளில் உள்ள வடிகான்களுக்குள் ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் , உணவகங்கள் என்பவற்றின் கழிவு நீர் விடுவதை காத்தான்குடி நகர சபை காத்தான்குடி சுகாதார அலுவலகம் என்பன இணைந்து தடை செய்துள்ளது.

காத்தான்குடி மேற் பார்வை பொது சுகாதார பரிசோதகர் பஷீர் பொதுச் சுகாதார பரிசோதகர் ரஹ்மத்துல்லாஹ் மற்றும் காத்தான்குடி நகர சபை அதிகாரிகள் உட்பட அதன் ஊழியர்கள் இணைந்து திங்கட்கிழமை(29)

அன்று காத்தான்குடி பிரதான வீதி உட்பட ஏனைய வீதிகளில்



உள்ள ஹோட்டல்கள் சிற்றுண்டிச் சாலைகள் உணவகங்கள் என்பவற்றின் கழிவு நீர் விடுவதை பார்வையிட்டதுடன் கழிவுநீர் விடும் வழிகள் காத்தான்குடி நகர சபை ஊழியர்களால் சீமந்து இட்டு அடைக்கப்பட்டன.

கழிவு நீரை வீதிகளில் உள்ள வடிகான்களுக்குள் விடுவதால் துர் நாற்றம் அசுத்தம் போன்றவைகள் தொடர்பாக பொது மக்கள் பல தடவைகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவித்தும் இதனை சீர் படுத்தாததால் இதனை அடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், இனி இவர்கள் தமது ஹோட்டல்களின் கழிவு நீரை பிரத்தியேக வழிகளை ஏற்படுத்தி அகற்ற வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.



## தாக்குதலை கண்டித்து உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

க. அகரன்

வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை (29) தனது அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா பம்பைமடு பகுதியில் அஸ்வெசும திட்டத்திற்கான பெயர் பதிவுகள் கடந்த வியாழக்கிழமை (25) அன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த ஒருவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியமைக்கு கண்டனம் தெரிவித்து இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## தேரரின் கணக்கில் இருந்து பணம் மோசடி

தொலைபேசி நிறுவனமொன்றின் பணியாளர்கள் என கூறி பதுளையில் உள்ள விகாரைக்கு வந்த இரு இளைஞர்கள் குறித்த விகாரையின் தேரரின் கைத்தொலைபேசியில் உள்ள சிம்கார்டை திருடி தேரரின் வங்கி கணக்கில் இருந்து ஆறரை லட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, வங்கியில் இருந்து என கூறி தேரருக்கு அண்மையில் தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது.

அதில், கணக்கு தொடர்பான உயர்த்தப்பட்ட VAT கட்டணத்தை குறைக்க அரசு உத்தரவு பெற்றுள்ளதால், வங்கி கணக்கு விவரங்களை வழங்குமாறு கேட்டுள்ளனர். அப்போது தேரர் தனது அனைத்து வங்கி விவரங்களையும் வழங்கியுள்ளார்.

சில நாட்கள் கழித்து விகாரைக்கு வந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் கைத்தொலைபேசியில் ஏதேனும் பிரச்சனையா என்று கேட்டுள்ளனர். அப்போது தொலைபேசியில் அழைப்பு விடுக்கும் போதெல்லாம் வித்தியாசமான சத்தம் கேட்பதால் அதை இளைஞர்களிடம் கூறி தொலைபேசியை கொடுத்துள்ளார்.

அதற்கமைய தொலைபேசியை சரி செய்து கொண்டிருந்த சந்தேக நபர்கள், எங்கள் நிறுவனத்திற்கு குறுஞ்செய்தி ஒன்று அனுப்ப வேண்டும் என கூறி தொலைபேசியை பெற்றுள்ளதுடன் பின்னர் தேரரிடம் அதை மீள் கொடுத்து விட்டு மிக்க நன்றி என்று கூறி விகாரையை விட்டு வெளியேறி சென்றுள்ளனர்.

சிறிது நேரம் கழித்து குறித்த தேரர் அழைப்பொன்றை எடுக்க முயன்றபோது, தொலைபேசி வேலை செய்யாததால் சோதனையிட்டு பார்த்த போது, சிம் கார்டு இல்லாதது தெரியவந்தது.

சிம் கார்டுகள் சில மோசடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதால் சந்தேகம் அடைந்த தேரர் தனது வங்கிக் கணக்குகளை தற்காலிகமாக செயலிழக்கச் செய்வதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். அப்போது அவரது கணக்கில் இருந்த ஆறரை லட்சம் ரூபாய் பணம் எடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

## வாழ்வாதாரத்தை உயர்த்தும் பயிற்சி



வி.ரி. சகாதேவராஜா

புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பணம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலம் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டிற்கமைய, இவ் வாழ்வாதார பயிற்சிநெறி நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதேபோன்று ஏனைய சில கிராமங்களிலும் இத்தகைய பயிற்சி நெறி எதிர்காலத்தில் ஆரம்பிக்கபடவுள்ளதுடன் இவ் வாழ்வாதார பயிற்சி நெறியானது 2 மாத கால எல்லையை கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூரிய மின் உற்பத்திக்கு எதிர்ப்பு



வ.சக்திவேல்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, கிராம மக்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக திங்கட்கிழமை (29) அன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நாவற்காடு கிராமத்தில் கடந்த 2022 ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்டு இயங்கி வரும் சூரிய சக்தி மின் உற்பத்தி (சோலார் பவர்) நிலையம் மேலும் பல மடங்கு விஸ்தரிக்கப்பட இருப்பதாக கூறி சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை அண்டிய கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சூரிய மின் உற்பத்தியை விஸ்தரித்தால் தமது விவசாய நிலங்களுக்கும், குடியிருப்புக்களுக்கும் கிராம மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து இதன்போது தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். இந்த விஸ்தரிப்பு திட்டத்தினை நிறுத்தக் கோரி பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

## விழிப்புலனற்றோர்களுக்கு உலர் உணவு பொதிகள்







வி.ரி.சகாதேவராஜா

வன்னி விழிப்புலனற்றோர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினூடாக ஒரு தொகுதி உலருணவுப் பொதிகள் திங்கட்கிழமை (29) வழங்கி வைக்கப்பட்டன.

ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த கஜேந்திரன்,ரஞ்சனியின் அன்பு குழந்தைகளான க.திபிஷா, க.திபிஷன் க..தியான் ஆகிய மூன்று குழந்தைகளின் 04வது பிறந்த தினம் 29ஆம் திகதியாகும்.

கிளிநொச்சியில் இயங்கி வரும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தை சேர்ந்த அதி கஷ்டத்தில் வாழ்ந்து வரும் 30 குடும்பங்களை தெரிவுசெய்து, ஒருவருக்கு (ஐந்தாயிரம் ரூபாய்) பெறுமதியான,உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.





இணைந்த கரங்கள் சார்பாக காந்தன், விவேக் ஆகியோர் கலந்து கொண்டு இதை வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா



ஆ.ரமேஸ்

நுவரெலியா மாநகரின் புனித பூமியில் அமைந்துள்ள புனித பிரான்ஸ் சவேரியார் ஆலயத்தின் கீழ் இயங்கும் கந்தப்பளை புனித சூசையப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி பாதுகாத்தால் 17 ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை (28) வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்த வருடாந்த திருவிழா திருப்பலி ஆலய பங்குதந்தை அருட்தந்தை காமிலஸ் ஜான்ஸ் தலைமையில் நுவரெலியா நம்மாதா உயர்நிலை பாடசாலை பிரதி அதிபர் அருட்தந்தை சேர்மலின் பங்கேற்றலுடன் நுவரெலியா நம்மாதா உயர்நிலை பாடசாலை அதிபர் அருட்தந்தை சிவந்த ரொட்ரிகோ அவர்களால் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.









# ‘கத்தி’ மாணவர்களும் கத்தும் ஆசான்களும்

மாணவ பருவத்தை ஒத்தவர்கள், பொது இடங்களில் பாடசாலை சீருடையின்றி நடந்துகொள்வதை பார்த்து, அவர்கள் கற்கும் பாடசாலையை மிகச் சரியாக பலரும் இனங்கண்டு கொள்வார்கள். அந்தளவுக்கு அப்பாடசாலையில் ஒழுக்கம் மாணவர்களிடத்தில் பிரதிபலிக்கும். ஒருசில மாணவர்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

பாடசாலையின் வரவேட்டில் பதிவை இட்டுவிட்டு, பாடசாலை நேரத்தில் உயர்தரத்துக்கான கணித தனியார் வகுப்பை நடத்திய ஆசிரியர் ஒருவர், இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், உயர்தரத்தில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர், மாணவனால் கத்தியால் குத்தப்பட்டுள்ள சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான உயர்தரத்தில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியரும் ஒழுக்கத்துக்குப் பொறுப்பானவரும் ஆவார். அவரது நிலைமை கவலைக்கிடமாக இல்லை.

எனினும், ஆசிரியரை பயமுறுத்துவதை விட காயப்படுத்தும் நோக்கில் மாணவன் கத்தியால் குத்தியதாக தெரிகிறது.

ஒரு மாணவனின் தவறைக் கண்டால், ஆசிரியர் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதை சரி செய்ய மாணவன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்வியை வழங்குவதற்கு மட்டும் இல்லை. மாணவர்களின் பண்பு மற்றும் ஒழுக்கத்தை பேணுவதும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

மாணவனின் தலைமுடி குறித்த கேள்வியே இந்த சம்பவத்திற்கு காரணமாகும்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவன் தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து ஆசிரியரை சரமாரியாக குத்தியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தால், ஒழுக்கத்துக்கு பொறுப்பான ஆசிரியர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களே பயப்படுவார்கள். எனினும், மாணவர்களின் ஒழுக்கம் கேள்விக்குறியாகிவிடும்.

பாடசாலைகள் கற்றலுக்கானவை, மாணவன் கத்தியை வைத்திருக்க முடியாது. மாணவர்களின் மன நிலையை ஆராய்வது மிகவும் அவசியமாகும்.

இருப்பினும், பாடசாலை செல்லும் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நடத்தைக்கு பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமே பொறுப்பு அல்ல என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

அந்த பொறுப்பில் வீடு மற்றும் பெற்றோருக்கும் பங்கு உண்டு.

வீட்டில் பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் நடத்தையை பெற்றோர்கள் கவனிக்காமல், பிள்ளைகள் செய்யும் தவறுகளை அவர்களிடம் காட்டி, அந்த தவறுகளில் இருந்து அவர்களை மீட்காவிட்டால், அத்தகைய பிள்ளைகள் பாடசாலைகளில் குறும்புக்காரர்களாகவும், கொடுமைப்படுத்துபவர்களாகவும் மாறுவார்கள்.

எதிர்காலத்தில் பிள்ளைகள் செய்யும் தவறுகளைக் கண்டும், அது குறித்து நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக் கொண்டாலும், அத்தகைய பிள்ளைகளிடம் ஒழுக்கமான நடத்தையை எதிர்பார்க்க முடியாது.

அந்தக் குழந்தைகளுக்கு நல்லது, கெட்டது வித்தியாசம் தெரியாது. புத்தளம் சம்பவத்தை இக்காலகட்டத்தில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமாக விளக்கலாம்.

வகுப்பறைகளை விட கூடுதலான நேரத்தை பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர், உறவினர்களிடம் செலவிடுகின்றனர்.

எவ்வாறாயினும், இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலும் நடக்கக்கூடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் ஒழுக்கம் பெற்றோரின் பொறுப்பு என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒருசிலர் வாழ்க்கையைப் பற்றி பயமுறுத்தியபடியே இருப்பார்கள். அடிக்கடி உலகில் நடக்கும் கஸ்டங்கள், துன்பங்களை மட்டுமே பேசிக்கொண்டிருப்பார்கள்.

எழுச்சி தரும் விடயங்கள், களிப்பூட்டும் அனுபவங்களை நினைப்பதே இல்லை. வெளி உலகை நோக்காமல் பயந்தபடி வாழ்வது மட்டுமன்றி, தன்னைச் சுற்றி இருப்பவர்களுடனும் துணிச்சலற்ற பேச்சுகளையே பேசுவார்கள். இத்தகையோருடன் பழகுவதே கஸ்டம்.

மக்கள் நிறைந்து வாழும் பூமியில் அச்சத்துடன் வாழக்கூடாது. எதையும் எதிர்கொள்ளத் தயங்கக்கூடாது. தேவையற்ற சில விடயங்களில் இருந்து, விலகவேண்டும். தெருவில் ஒருவன் போதையில் அலட்டினால், அதைக் கேட்டு இரசிக்கக்கூடாது.

தெருவில் எவராவது சண்டையிட்டால், திரும்பிப் பார்த்து அதை விமர்சிப்பது முட்டாள்தனம். இதனால், தேவையற்ற கும்பலுடன் மல்லுக்கட்ட வேண்டி ஏற்படலாம்.

உலகில் இரசிக்க வேண்டிய விடயங்கள் பலவுண்டு. தகாததைப் பார்ப்பதே தவறானது. பெறுமதியான காலத்தை இழக்கலாமா? நல்லதை நோக்குக; அனுபவியுங்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இன்னும் காலம் இருக்கிறது

மொஹமட் பாதுஷா

> தமிழ் மக்களின் வாக்குகள் இந்த முறை மிகத் தெளிவாக பிளவுபட போகிறது. நாட்டுக்கோ சமூகத்திற்கோ எந்த பிரதிபலனையும் பெற்றுத் தராத முடிவுகளுக்குப் பின்னால் போவதை தமிழ் மக்கள் இம்முறை தவிர்த்துக் கொள்வது நல்லது.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஆட்டம் தொடங்கியிருக்கிறது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு தேர்தல் பற்றிய பேச்சுக்களும், பரப்புரைகளும், வசைபாடல்களும், வெற்றி தோல்விகளும், வன்முறைகளுமாக நமது அரசியல் களம் நிரம்பி வழியும்.

வாய்ச்சொல் வீரர்களாக வீராப்பு பேசிவந்த அரசியல் கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் தம்முடைய உண்மையான மக்கள் ஆதரவை நிருபிக்க வேண்டிய நாள் நெருங்கியுள்ளது. அதேநேரம், இவ்வளவு காலமும் தாம் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் ஊடாகவும் பகுத்தறிவைப் பயன்படுத்தியும் நல்லதொரு ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பை மக்கள் சுமந்துள்ளனர்.

நாட்டில் அனைத்து மாகாண சபைகளின் பதவி காலங்களும் நிறைவடைந்து வருடங்கள் கடந்து விட்டன. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இதுபோலவே தடபுடலாக மேற்கொள்ளப்பட்டன. பிறகு பல்வேறு காரணங்களை சொல்லி ஒத்திவைக்கப்பட்டது. இன்று வரை அதை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமோ, ஆணைக்குழுவோ மேற்கொள்ள முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலும், மொட்டு அணியின் பக்க பலத்துடனும் இருக்கின்ற அரசாங்கமானது, ஜனாதிபதித் தேர்தலையோ பொதுத் தேர்தலையோ இப்போதைக்கு நடத்தாது என்றே கூறப்பட்டு வந்தது. மறுபுறத்தில், தேர்தலை உடன் அறிவிக்க வேண்டும் என்ற அழுத்தங்களும் எல்லாப் பக்கத்தில் இருந்தும் பிரயோகிக்கப்பட்டன.

தேர்தல் பற்றிய பயம் எல்லாக் கட்சிகள், வேட்பாளர்களுக்கும் இருந்தாலும், ரணில் விக்கிரமசிங்க தனது கடந்த கால தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் சற்று அதிகமாகவே தயங்குவார் என்ற கருத்துக்களும் பரவலாக வெளியாகியிருந்தன. அது என்னவோ உண்மைதான். ஆனால் இந்த முறை நிலைமை வேறு விதமானது.

அரசியல் குழப்பங்கள், பொருளாதார நெருக்கடிகளால் அதல பாதளத்தில் கிடந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க ஒரு ஜனாதிபதியாக பொறுப்பேற்று நிலைப்படுத்தியதன் மூலம் சிலவற்றை செய்து காட்டியிருக்கிறார். தேர்தலை நோக்கிய மக்கள் சேவைகளை செய்து கொண்டிருக்கிறார். எனவே கடந்த காலத்தை விட இம்முறை அவருக்கு தைரியம் அதிகம் இருக்கும் எனலாம்.

ஒருவேளை அவர் பயந்திருக்கலாம். ஏன், இப்போதும் கூட ஏதாவது நகர்வைச் செய்து தேர்தலை குழப்புவதற்கு அரசாங்கத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதன் பின்னணியில் அவர் இருக்கிறாரா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை நன்கு கவனிக்க வேண்டும்.

அதாகப்பட்டது, நாம் மேலே குறிப்பிட்டது போல ஏற்கனவே மாகாண சபை தேர்தல்கள், உள்ளூராட்சி சபை தேர்தல்கள் வருடக் கணக்காக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தாமல் விடுவது நடைமுறை சாத்தியமற்றது.

தேர்தல்களால் எதுவும் பெரிதாக நடந்து விடப் போவதில்லை என்றாலும், ஆட்சியாளரை தேர்ந்தெடுப்பதற்கான ஜனநாயக நடைமுறை என்ற அடிப்படையில் உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் தேர்தலுக்கான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆகவே, இந்தத் தேர்தலும் நடைபெறாமல் விடுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகும். அப்படியான ஆலோசனைகளை ஜனாதிபதிக்கோ, அரசாங்கத்திற்கோ யாராவது வழங்குவார்கள் என்றால் அவர்களை விட முட்டாள்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அத்துடன் அதனால் நாட்டில் ஏற்படக் கூடிய கொந்தளிப்புக்கு அவர்களே பொறுப்புக் கூற வேண்டிவரும்.

ஆகவே, இலங்கையின் அரசியலில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்ட ஒரு ஆட்சியாளரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு அப்படியொரு முட்டுச் சந்துக்குள் நாட்டைக் கொண்டு நிறுத்தும் என கருத இடமில்லை. அப்படிக் குழப்பியடித்தால் வம்பை விலைக்கு வாங்கியதாகவே வந்து முடியும்.

அந்த அடிப்படையில், நாடும் மக்களும் தேர்தலுக்கு தயாராக வேண்டியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவும், தெரிவத்தாட்சி அதிகாரிகள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலைய அதிகாரிகளும் முப்படையினரும் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதை விட இந்த நாட்டில் வாழ்கின்ற மூவின மக்களும் தம்மை தயார்படுத்திக் கொள்வது தான் முக்கியமானது.

இந்தத் தேர்தல் மட்டுமல்ல, எந்த தேர்தலும் தீர்க்கமானதுதான். மக்கள் எடுக்கின்ற புத்திசாலித்தனமான, முட்டாள்தனமான முடிவுகள் தான் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கின்றன. குறிப்பாக ஜனாதிபதியை தீர்மானிப்பதில் சிங்கள மக்களின் வாக்குகள் குறிப்பிடத்தக்க வகிபாகத்தை கொண்டிருக்கின்றன.

69 லட்சம் மக்களின் அப்பாவித்தனமான முடிவுகள் நாட்டை எங்கே கொண்டு போய் நிறுத்தியது என்பதை நாம் இன்னும் மறந்து விடவில்லை அதேநேரம், தமிழர்களும் முஸ்லிம்களும் பாராளுமன்ற தேர்தல் வாக்களிப்பில் மட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் கடந்த காலத்தில் எடுத்த தீர்மானங்களின் விளைபயன்களையும் அறிவோம்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் பிரதான போட்டிக் களத்தில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க, மொட்டு அணியின் வேட்பாளார் ஆகியோர் இருக்கப் போகின்றனர். ஏனையவர்கள் தேசிய அளவிலான இந்தப் பந்தயத்தில் தன் பங்கிற்கு ஓடுவார்கள்.

இலங்கையில் வாக்காளர்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்ற கட்சியும் ஜனாதிபதியும் இந்த நாட்டை படுத்தியபாடு கொவிட் -19 பெருந்தொற்றுக்கு பிறகான பொருளாதார நெருக்கடியால் ஒவ்வொரு குடும்பமும் அனுபவித்த துயரங்களும் இதனைக் கற்றுக் கொடுத்திருக்கிறன. ஆனால், இது எந்தளவுக்கு வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தும் என்பது செப்டம்பர் 21ஆம் திகதி தான் தெரியும்.

புள்ளடி போடுவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. எனவே மக்கள் இப்போதிலிருந்து சிந்திக்கத் தொடங்க வேண்டும். கடந்த கால அனுபவங்கள், அனுபவமற்ற அரசியல்வாதிகள், இனவாத ஆட்சியாளர்கள் ஏற்படுத்திய வடுக்கள், பிரதான பெரும்பான்மைக் கட்சிகளின் ஆளுகை வரலாறு என்பவற்றை பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

இப்போது இவர்தான் வெல்வார் - அவர்தான் ஜனாதிபதி யார் என்ற அனுமானங்கள் வெளியாகத் தொடங்கிவிட்டன. இருப்பினும், இந்தக் களநிலைகள் நாளாந்தம் மாறிக் கொண்டே இருக்கும்.

எனவே மக்கள் குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்கள் தமது முடிவுகளை மிகக் கவனமாக எடுக்க வேண்டும். தமது அரசியல்வாதிகள், எம்.பி.க்கள் சொல்வதைக் கேட்டு, அவர்கள் கை காட்டுகின்ற வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் மக்களுக்கு இல்லை.

தமிழ் தரப்பில் பொது வேட்பாளர் என்று ஒரு தரப்பும், பெரும்பான்மையின வேட்பாளர் என்று ஒரு தரப்பும் பேசிக் கொண்டிருக்க, தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று இன்னுமொரு கூட்டமும் கூறிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிலர் ஆளும், எதிர் கட்சிகளுக்கு ஆதரவளிப்பார்கள்.

ஆகவே, தமிழ் மக்களின் வாக்குகள் இந்த முறை மிகத் தெளிவாக பிளவுபட போகிறது. ஆனால், நாட்டுக்கோ தமது சமூகத்திற்கோ எந்த பிரதிபலனையும் பெற்றுத் தராத முடிவுகளுக்குப் பின்னால் போவதை தமிழ் மக்கள் இம்முறை தவிர்த்துக் கொள்வது நல்லது.

முஸ்லிம் சமூகத்தில் இது காலவரை தேர்தல் பற்றிய ஒரு ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெறவில்லை. முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை முஸ்லிம் கட்சிகள், எம்பிக்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து பேசவில்லை. ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரலுடன் இருக்கின்றனர்.

‘அவர்’ பெற்றதை விட நான் அதிக நிதி ஒதுக்கீட்டை பெற வேண்டும். அவரை விட நல்ல பதவி எனக்குக் கிடைக்க வேண்டும். அதை வைத்து மக்களுக்குச் சேவை செய்து அடுத்த பாராளுமன்ற தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணமே பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இருக்கிறது.

அந்த அடிப்படையில் கட்சி தாவும் அரசியல் ஆரம்பமாகிவிட்டது. இன்னும் சிலர் மதில்மேல் பூனைகளாக இருக்கின்றனர். இன்னும் சில நாட்களில் பொய் மூட்டைகள், போலிப் பிரசாரங்களுடன் இவர்கள் மேடையேறுவார்கள். மீண்டும் பழைய பல்லவிகளை வேறு வேறு ராகத்தில் பாடுவார்கள்.

முஸ்லிம் மக்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் எந்த முடிவை எடுத்தாலும் அதனால் பாதகமான விளைவுகள் ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்வார்கள். ஆனால் முஸ்லிம் சமூகம் அப்படிப் பழக்கப்படவில்லை. எனவே முடிவுகளை கவனமாக எடுக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்காக குரல் கொடுக்காத தலைவர்கள், எம்.பி.க்கள், எந்தவித சமூக ரீதியான உடன்படிக்கையும் இன்றி குறிப்பிட்ட ஒருவருக்கு வாக்களிக்கச் சொல்லும் அரசியல் தளபதிகளுக்கு பின்னால் முஸ்லிம் வாக்காளப் பெருமக்கள் போகத் தேவையில்லை. நீங்களே, சுயமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அதற்கு இன்னும் காலம் இருக்கிறது.

## கடிதங்கள்

### பேருந்து சேவை நடாத்துங்கள்

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கிராமத்திற்கான முதன்மை வீதியினை புனரமைத்து பேருந்து சேவைகள் நடாத்த வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சுதந்திரபுரம் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏ-35 சாலையில் இருந்து கிராமத்திற்கான கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்ட போதிலும் குறித்த தற்போது பல

இடங்களில் சேதமடைந்து இருப்பதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

1000 குடும்பங்கள் வாழ்கின்ற கிராமத்திற்கு சேதமடைந்த

வீதியினை சுட்டிக் காட்டி பேருந்துகள் வருவதில்லை.

இதன் காரணமாக 08 கிலோ மீற்றர் துரம் நடந்து சென்றே சுதந்திரபுரம் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்புக்கோ பிற இடங்களுக்கோ பயணிக்க கூடிய நிலை உள்ளது.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கிராம மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் வீதியினை புனரமைத்து பேருந்துகள் சேவைகள் நடாத்துங்கள் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ளதாக சுதந்திரபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் தலையீட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்

### தனியாளின் ஆளுமை விருத்தியில்

# சமூகமயமாக்கலின் வகிபங்கு

எம்.எப். எப். மாஹிரா

நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு,
சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஆளுமை விருத்திக்கும் சமூகமயமாக்கலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருப்பதனை அவதானிக்கலாம். ஒருவரின் ஆளுமை வளர்ச்சியில் சமூகமயமாதல் பெரிதும் தாக்கம் செலுத்தும். வாழும் சூழல் மற்றும் சமூகத்திற்கு ஏற்ற வகையில் வாழப் பழகிக் கொள்ளும் நெடுங்கால செயன்முறையை சமூகமயமாக்கல் என்று கூறப்படுகிறது.

ஆளுமை விருத்தியில் சமூகமயமாக்கலின் வகிபங்கினைச் சரியாக அறிந்து கொள்வதற்கு முதவில் ஆளுமை என்ற எண்ணக்கருவினையும் சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவினையும் தனித்தனியே சுருக்கமாக நோக்குவோம்.

ஆரம்பத்தில் ஒருவரின் தோற்றம், உருவம், அமைப்பு,பேச்சு,இயல்புகள் போன்ற வெளித்தோற்றங்களை ஆளுமை குறிப்பதாக சாதாரணமாக கருதப்பட்டது.

விரிந்த நோக்கில் ஒருவருடைய மனப்பாங்கு, குணப்பண்புகள், நிறைவேற்ற முடியுமான, முடியாத செயல்கள், பிரச்சிளைகளை எதிர்கொள்ளும் விதம், நம்பிக்கை, விருப்பு, வெறுப்பு, வாழ்க்கை எதிர்பார்ப்புகள், சிந்தனைமுறை போன்ற பண்புகள் உள்ளடங்கிய ஒருவர் வெளிப்படுத்தும் நிலையானதும், உறுதியானதுமான நடத்தை அமைப்புக்கள் ஆளுமையாக கொள்ளப்படுகிறது.

சமூகமானது அழியாமல் பாதுகாக்கும் கருவியாக கல்வி உள்ளது. எனவே ஆளுமை ஒருவரின் அக புறத்தோற்றம், நடத்தை, செயற்பாடுகள், மனவெழுச்சி நிலைகள், எதிர்பார்புகள், ஆளிடைத் தொடர்புகள் போன்ற பல்வேறு அம்சங்களுடனும் தொடர்புபட்டதாகும்.

ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக பரம்பரைக் காரணிகள், உடல் காரணிகள், சூழல் காரணிகள் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சமூகமயமாக்கல் என்பது சமூக இசைவாக்கல் சமூகத்திற்கு உரித்தாக்கல். சமூகப் பொருத்தப்பாடடையச் செய்தல் முதலிய பல்வேறு பெயர்களால் அடையாளம் காணப்படுகின்றது. இதன்படி சமூக நிலமைக்கேற்றவாறு ஒருவர் பொருத்திக்கொள்ளல், ஒழுங்கமைத்துக் கொள்ளல், மாற்றியமைத்துக் கொள்ளல், இணங்கிக் கொள்ளல் முதலிய செயற்பாடுகளை சமூகமயமாக்கல் என்பது புலப்படுத்தும்.

மனித வாழ்வு என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட மனித வாழ்வியல் காலகட்டங்களைக் குறிக்கின்றது.

இக்கால கட்டத்தில் மனிதன் குடும்பம், திருமணம், கல்வி, மதம், பட்டம், பதவி, செல்வம் மற்றும் அந்தஸ்து என்று பலவாழ்க்கைக் கோலங்களில் சங்கமிக்கின்றான்.

ஒவ்வொரு மனிதன்னும் தம் மனப்பாங்கு, நடத்தை, சிந்தனை, ரசனை, ஆசைகள் போன்றனவவை வேறுபட்டுச் செல்வதனை அவதானிக்கலாம். இவ்வாறான வேறுபட்ட நடத்தைக் கோலங்கள் மானிடர்களிடையே காணப்படுவதற்கான காரணம் என்ன? என்ற சமூகவியலாளர்களின் வினாவிற்கு விடைகள் காணமுயன்ற வேளையில் தோன்றியதே சமூகமயமாக்கல் எனும் அம்சமாகும்.

எனவே தான் சமூகமயமாக்கல் என்பது ஒரு செயன்முறை எனவும், அது தனிநபரை அல்லது ஆளை மாற்றுகின்றது எனவும், தனிநபரை சமூகத்தின் அல்லது கலாச்சாரத்தின் அங்கம் ஆக்குகின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சமூகமயமாதலை வரைவிலக்கணப்படுத்தும் போது ஒரு மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கு தேவையான சமூக, சமய, கலாசார, பண்பாட்டு, ஒழுக்க சேவைகள் மற்றும் சமூக விழுமியங்கள் போன்ற விடயங்களைக் கற்றுத் தானும் ஒரு சமூக அங்கத்தவனாக வாழ்வதற்கு முயலும் செயன்முறை சமூகமயமாக்கல் என வரையறுக்கப்படுகின்றது.

தனியாள் ஒருவர் தான் சார்ந்துள்ள சமூகத்தின் நடத்தைகள், பெறுமானங்கள் மற்றும் சிந்தனைகளைக் கற்கும் செயன்முறையாகும்.

தனியொருவர் சமூக நடத்தைகள் பற்றிய விளக்கத்தைப் பெறுதல், அவற்றிற்கு ஏற்ப பொருத்தப்பாட்டைதல் அல்லது அடையாதிருத்தல், அவற்றைத் தவிர்த்தல் அல்லது அவற்றோடு தாக்கமுறுதல் ஆகிய அத்தனை தொழிற்பாடுகளும் சமூகமயமாக்கலில் அடங்கும் என்பது சமூகக் கணிப்பீடுகளின் படி எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும்.

ஆளுமை விருத்தியில் சமூகமயமாக்கலின் வகிபங்கு ஆளுமை என்பது ஒருவரின் மனப்பாங்கு, குணப்பண்புகள், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதம், நம்பிக்கை,விருப்பு,வெறுப்பு, வாழ்கை எதிர்பார்ப்புகள். சிந்தனை முறை, நடைமுறைகள், பேச்சு, செயற்பாடுகள், நடத்தைகள் ஆகிய அனைத்தும் உள்ளடங்கியதாகும். சமூகமயமாக்கல் நேரடியாகத் தொடர்புபடுவதைக் காணலாம். முக்கிய அம்சமாக சமூகமயமாக்கல் காணப்படுகிறது.

சமூகப்பிராணியான மனிதன் சமூகமயமாக்கலுக்கு உட்பட்டு ஆளுமையை விருத்தி செய்ய வில்லையாயின் அவன் சமூகத்துடன் இணைந்து வாழ்வதில் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிவரும். சமூகமயமாக்கல் முகவர்களான குடும்பம், சமவயதுக் குழுக்கள், சகபாடிகள், பாடசாலை, கல்வி நிறுவனங்கள், கழகங்கள், ஊடகம், அரசியல் ஆகியவை ஆளுமைப் பண்புகளை உருவாக்குவதில் நேரடியாகத் தொடர்புபடுகின்றன.

பேச்சு ஆளுமையின் ஒரு அம்சமாகும். பேச்சுக்கான அடிப்படைகளை ஒருவன் சமூகமயமாக்கும் நிறுவனங்களில் ஒன்றாக குடும்பத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறான். அதிக எண்ணிக்கையான குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளை மிக விரைவாக பேசக் கற்றுக் கொள்வதனை சிறந்த ஒரு உதாரணமாகக் கூறலாம்.

மனப்பாங்கு, குணப்பண்புகள், நம்பிக்கை, நடத்தைகள் போன்ற ஆளுமைப் பண்புகளின் உருவாகுவாக்கத்திலும் சமூகமயமாக்கல் பெரிதும் பங்கு வகிக்கிறது. குடும்பம், சமவயதுக் குழுக்கள், சகபாடிகள், பாடசாலை, தான் சார்ந்துள்ள சமூகம் என்பன இவற்றில் சமூகமயமாக்கலின் ஊடாக தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக மூட நம்பிக்கைகள் அதிகமுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளை அம்மூட நம்பிக்கைகளில் தானும் உறுதி கொள்ளும் நிலையைக் காணலாம் சமவயதுக்குழுக்கள் சகபாடிகள் போன்றோரின் தாக்கமும் சமூகமயமாதலின் ஊடாக ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம் இக்குழுக்களினூடாக தலைமைத்துவம், தனது ஆற்றலை வெளிப்படுத்துதல், முன்னின்று செயற்படல், உணர்வுகளைப் பரீட்சித்தல் என்பனவற்றை இவர்கள் அடைந்து கொள்கின்றார்.

தலைமைத்துவம், ஆற்றலை வெளிப்படுத்தல், முன்னிற்றல் என்பன ஆளுமைப்பண்புகளில் முக்கியமாவையாகும்.

பிள்ளைகளை சமூகமயமாக்கல் செயன்முறைக்கு உட்படுத்தும் நிறுவனங்களில் முக்கியமானதாக பாடசாலை காணப்படுகிறது.

ஒரு மனிதனுக்குத் தேவான பல ஆளுமைப் பண்புகளை பாடசாலைகள் வளர்க்கின்றன. இவை சமூகத்தில் அவள் சிறந்து விளங்கவும் சரியாகச் செயற்படவும் உதவுகின்றன. உதாரணமாக கட்டுப்பாடுகள்,ஒழுங்குகள், விதிகளுக்கு உடன்பட்டு நடத்தல் முதியோரை மதித்தல், நற்செயல்களில் ஆர்வம் ஏற்படுத்தல் போன்றவற்றிற்கு பாடசாலைகள் வழிகாட்டுகின்றன.

இவையனைத்தும் ஆளுமையுடன் தொடர்புபட்ட அச்சங்களாக இருப்பதால் சமூகமயமாதலின் பங்கு எந்தயை ஆளுமை வளர்ச்சியில் உள்ளதென்பதனைக் கண்டுகொள்ள முடிகிறது.

பாடசாலைகள் சமூகத்திற்குரிய கலாசாரங்களை ஊடுகடத்துகின்றன. பாடசாலையில் மனித தொடர்புகள் சம்பந்தப்பட்ட சிக்கலான சடங்கு சம்பிரதயாங்கள் பழக்கவழக்க முறைகள் பாரம்பரியங்கள் அவற்றுடன் தொடர்புடைய ஒழுக்கவிதிகள் காணப்படுகின்றன. பாடசாலைகளைப் போன்றே தனியார் கல்வி நிறுவனங்கள், ஞாயிறு பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களும் சமூகமயமாக்கல் முகவர்களாக செயற்படுகின்றன.

ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்துவமான சமய வழிபாடுகள் கலை கலாசாரங்கள், நடைமுறைகள் என்பன உள்ளன. இவற்றை சமய நிறுவனங்களினூடாக அறிந்து கொள்வதுடன் சமயம் சார்ந்த கிரியைகள், நடத்தைகள் என்பனவற்றை கடைப்பிடிக்கவும் சமய நிறுவனங்களினூடாக கற்று கொள்கிறான்.

இன்றைய நவீன உலகில் சமூகமயமாக்கல் செயன்முறையை மேற்கொள்ளும் நிறுவனங்களில் ஊடகம் முக்கியமானதொன்றாகும். உதாரணமாக ஊடகங்களில் தோன்றும் பிரபல்யமான நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் பாடகர்கள், ஆட்சியாளர்கள் போன்றோரைப் பின்பற்றி அவர்களைப் போன்று உடையணிகின்ற தலைசீவுகின்ற நடத்தைக் கோலங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

நடத்தைக் கோலங்கள் ஒருவரின் ஆளுமையில் முக்கிய அம்சமாக இருப்பதனால் ஆளுமை விருத்தியில் சமூகமயமாக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது எனலாம்.

அரசியலும் ஒரு சமூகமயமாக்கல் கருவியாக கொள்ளப்படுவதுண்டு அரசியல் நிறுவளங்களான அரசியற் கட்சிகள், அமுக்கக்குழுக்கள், பாராளுமன்றம் போன்றனவும் சமூகமயமாக்கலை மேற்கொள்கின்றன. தலைமைத்துவப்பண்புகள், தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுதல் கூட்டாக செயற்படுதல், போன்ற பல்வேறு விடயங்களை அரசியல் நிறுவனங்களினுடாக மனிதர்கள் அடைத்து கொள்கின்றனர். இவையும் ஆளுமைப் பண்புகளாகவே கொள்ளப்படுவதால்

மனிதன் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கும் தான் சார்ந்துள்ள சமூகத்தின் விழுமியங்கள், கலை, கலாசாரம், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள், நடைமுறைகள் என்பவைற்றை அறிந்து கடைப்பிடிப்பதற்கு சமூகமயமாக்கல் இன்றியமையாததாகும்.

நான் யார்? தனக்குள்ள ஆற்றல்கள் என்ன? தனது விசேட திறமைகள் என்ன? என்பனவற்றை ஒரு மனிதனுக்கு சமூகமயமாக்கல் செயன்முறையே உணர்த்துகிறது.

இந்தவகையிலும் இதன் வகிபங்கு முக்கியத்துவமுடையதாகும். செய்யக்கூடியவை எவை? செய்யக்கூடாதவை எவை? என்பனவற்றை அறிந்து கடைபிடிக்கவும் சமூகமயமாக்கல் அவசியமாகும்.

பெற்றோர், ஆசிரியர்கள், பிள்ளைகளை வழி நடத்தும் ஏனையோர்கள் அனைவரும் சிறந்த முறையில் பிள்ளை சமூகமயமாக கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக பாடசாலைகளில் மாணவ மன்றங்கள், கலை விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தைப் பெறும் மாணவர்கள் பேச்சாற்றல், பாடும் நிறள், நடிக்கும் ஆற்றல், அறிவிப்புச் செய்யும் திறன் போன்ற பல்வேறு ஆளுமைத் திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

சமூகமயமாக்கல் சில வேளைகளில் எதிர் நடத்தைகளையும் தோற்றுவிக்கின்றன. சகபாடிகள், சமவயதுக் குழுக்கள், சமூக, குடும்ப அமைப்பு என்பன இதனைத் சில வேளைகளில் தோற்றுவிக்கின்றன இதனால் ஒருவரின் ஆளுமை குறைத்து மதிப்பிடப்படுவதுமுண்டு. இதற்கான சிறந்த சந்தர்ப்பங்களை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது எமது பொறுப்பாகும்.

# நடிகையின் துப்பாக்கி சர்ச்சை





'பாண்டியன் ஸ்டோர்ஸ்' சீரியலில் நடித்த சுஜிதா அண்மையில் தனது யூடியூப் சேனலில் வெளியிட்டு இருந்த ஹோம் டூர் வீடியோவில் வேட்டை துப்பாக்கி இருந்தது.

இதனையடுத்து, அந்த துப்பாக்கிக்கு லைசென்ஸ் இருக்கிறதா என்பது போன்ற பல கேள்விகளை நெட்டிசன்கள் எழுப்பி வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கு விளக்கம் அளித்துள்ள சுஜிதா, அது தனது நண்பருடைய வீடு கோவை அருகே மருதமலை அடிவாரத்தில் வீடு உள்ளது என்றும் கூறியுள்ளார்.

நீலகிரி சுற்றுலா சென்ற போது அவருடைய வீட்டிற்கு போனதாகவும், அவருடைய வீட்டை பார்த்ததும் ஹோம் டூர் வீடியோ எடுக்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரங்கள் இயற்கை சூழ இருந்த அந்த வீட்டை நண்பருடைய சம்மதத்துடன் வீடியோ எடுத்து தனது சேனலில் வெளியிட்ட நிலையில், அந்த வீடியோவில் தான் ஏர் ரைபிள் என்ற வகை துப்பாக்கி இருந்ததை பார்த்து பலரும் பலவிதமான கருத்துக்களை பதிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வனப்பகுதியில் அவர்கள் வசிப்பதால் பாதுகாப்புக்கு வைத்திருக்கும் அந்த துப்பாக்கிக்கு லைசென்ஸ் கூட தேவை இல்லை. ஆனால் அதை சர்ச்சைக்குரிய வகையில் பலரும் பேசி உள்ளனர். இந்த தகவல் பரபரப்பானதை அடுத்து எனது நண்பரே என்னை அழைத்து 'எப்படி இது மாதிரி எல்லாம் யோசிக்கிறாங்க என்று தெரியவில்லை' என்று கூறி சிரித்தார்.

சில செய்தி சேனல்கள் கூட என்னிடம் விளக்கம் கேட்காமல் இந்த செய்தியை ஒளிபரப்பி உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் வனத்துறையில் இருந்து எங்களிடம் யாரும் விசாரணை செய்யவில்லை என்று விளக்கம் அளித்துள்ளார்.





# சமந்தாவுக்கு புதிய காதலா?

நடிகை சமந்தா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள புகைப்படத்தால் அவர் மீண்டும் காதலில் விழுந்துள்ளாரா என ரசிகர்கள் கேட்டு வருகின்றனர்.

நடிகை சமந்தா இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யும் புகைப்படங்கள் வீடியோக்கள் வைரலாகி வருவது வழமை.

இந்த நிலையில், நடிகை சமந்தா காரில் சென்று கொண்டிருக்கும் ஒரு புகைப்படத்தை பதிவு செய்து அதில் கையில் ஒரு துண்டு சீட்டை காட்டி இருக்கிறார். அதில் Find Honey on 01/08 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை பார்த்த பலரும் ஆகஸ்ட் ஒன்றாம் திகதி முதல் டேட் செய்ய போகிறீர்களா? என்பது போன்ற கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

ஆனால் உண்மையில் சமந்தா நடித்து வரும் 'சிட்டாடல்' வெப் தொடர் ஆகஸ்ட் 1ஆம் திகதி வெளியாகவுள்ளது. இதை அறிவிப்பதற்காக தான் வித்தியாசமாக சமந்தா இந்த போஸ்டை பதிவு செய்துள்ளார்.

# ஓவியாவின் அறிவுரை

பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலம் அடைந்த நடிகை ஓவியா 'களவாணி' 'மன்மதன் அம்பு' 'முத்து குளிக்க வாரீகளா' 'மூடர்கூடம்' 'சில்லுனு ஒரு சந்திப்பு' 'மதயானை கூட்டம்' உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தற்போது அவர் 'சம்பவம்' 'ராஜ பீமா' ஆகிய இரண்டு படங்களில் நடித்து வரும் நிலையில் இன்ஸ்டாகிராமில் மது அருந்திக்கொண்டு உணவு சாப்பிடும் புகைப்படத்தை பதிவு செய்து 'குடிப்பழக்கம் உடல் நலத்திற்கு தீங்கானது' என்றும் தெரிவித்துள்ளார்.

ஓவியாவின் இந்த பதிவுக்கு பல்வேறு கருத்துகள் பதிவாகி வருகிறன.





## 'டிமான்டி காலனி 2'

# சென்சார் தகவல்

அருள்நிதி நடித்த 'டிமான்டி காலனி 2' திரைப்படம் வரும் ஆகஸ்ட் 15ஆம் திகதி வெளியாக உள்ள நிலையில் படத்தின் சென்சார் தகவல் வெளியாகி உள்ளது.

அருள்நிதி நடிப்பில் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் உருவான 'டிமான்டி காலனி' என்ற திரைப்படம் கடந்த 2015 ஆம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்றதை அடுத்து ஒன்பது ஆண்டுகள் கழித்து இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தை பார்த்த சென்சார் அதிகாரிகள் 'யூ/ஏ' சான்றிதழ் அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளன. மேலும் இந்த படத்தின் புரமோஷன் பணிகள் விறுவிறுப்பாக நடத்த படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர் அருள்நிதி, ப்ரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், முத்துக்குமார், பிக் பாஸ் அர்ச்சனா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சாம் சிஎஸ் இசையில் உருவான இந்த படத்திற்கு ஹரிஷ் கண்ணன் ஒளிப்பதிவும் குமரேஷ் படத்தொகுப்பு பணியும் செய்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெனிசுலா

## வெனிசூலாவில் நிக்கோலஸ் மதுரோ

# மூன்றாவது முறை ஜனாதிபதியானார்



வெனிசூலாவின் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நிக்கோலஸ் மதுரோ மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தேர்தல் ஆணையத்தாலேயே, இவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் அறிவிப்பானது, வெனிசுலாவின் 25 வருட இடதுசாரி ஆட்சியை முடிவிற்கு கொண்டு வருவது பற்றிய எதிர்கட்சியினரின் கனவை கலைக்கும் விதமாக அமைந்துள்ளதாக ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், மதுரோ தனது வெற்றியை தனது வழிகாட்டியான மறைந்த ஜனாதிபதி ஹ்யூகோ சாவேஸக்கு அர்ப்பணித்ததுடன் தேர்தல் வெற்றிக்குப் பின் கராகஸில் ஆதரவாளர்களிடம் உரையாற்றியுள்ளார். அதில், “நான் எங்கள் ஜனநாயகம், எங்கள் சட்டம் மற்றும் எங்கள் மக்களைப் பாதுகாப்பேன்” என்று உறுதியளித்துள்ளார்.

வொஷிங்டன்

## கமலா ஹாரிஸுக்கு குவியும் ஆதரவு

# சோகத்தில் டிரம்ப் ஆதரவாளர்கள்



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸுக்கு ஆதரவு அதிகரித்து வருவதால் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதையொட்டி பல அரசியல் நிகழ்வுகள் அரங்கேறி வருகின்றன. ஆரம்பத்தில் டொனால்ட் ட்ரம்பை, ஜோ பைடன் எதிர்கொள்வார் என்ற நிலை மாறி அவரே துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக அங்கீகரித்தார்.

இந்நிலையில், ஜோ பைடன் தேர்தல் வேட்பாளராக இருந்தவரை டொனால்ட் ட்ரம்ப்-க்கு இருந்த மக்களின் ஆதரவு நிலைப்பாடு தற்போது சரிய தொடங்கி இருப்பதாக கருத்து கணிப்பு முடிவுகள் வெளியாகி இருக்கின்றன.

அமெரிக்காவின் முன்னணி பத்திரிகையான வால் ஸ்ட்ரீட் ஜர்னல் கருத்துக்கணிப்பு முடிவில் மக்கள் ஆதரவில் கமலா ஹாரிஸ் 49 சதவீதமும், டொனால்ட் ட்ரம்ப் 47 சதவிகிதமாக பதிவாகி இருக்கிறது. மற்றொரு முன்னணி பத்திரிகையான நியூயோர்க் டைம்ஸ் கருத்து கணிப்பு முடிவில் ஜோ பைடன், கறுப்பின வாக்காளர்களில் 59 சதவீத வாக்குகளை மட்டுமே பெறுவார் என தெரிவித்து இருந்தது.

மேலும், ஜனாதிபதி வேட்பாளர் மாற்றத்திற்கு பிறகு கமலா ஹாரிஸ் 69 சதவீத வாக்குகளை பெறுவார் என கணித்துள்ளது. இந்த முடிவுகளின் அடிப்படையில் அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்பின் வாக்கு சதவீதம் சரிவை நோக்கி நகர்வதால் அவரது ஆதரவாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மொஸ்கோ


# அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

கடந்த 2022ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் உதவிகளை அளித்து வருகின்ற நிலையில், ரஷ்ய தாக்குதலுக்கு உக்ரைன் அடிக்கடி பதிலடி கொடுத்து வருகிறது.

சமீபத்தில் அமெரிக்காவும் ஜெர்மனியும் வெளியிட்ட கூட்டறிக்கையில், உக்ரைனில் ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் சூழ்நிலையில், ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு அமெரிக்காவின் எஸ்எம்- 6 ஏவுகணைகள், தோமஹாக் அதிவேக ஏவுகணைகளை ஜெர்மனியில் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த 28ஆம் திகதி செயின்ட் பீட்டர் ஸ்பர்க்கில் நடந்த கடற்படை விழாவில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பேசுகையில்,“ அமெரிக்கா இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தினால், எங்கள் கடற்படையின் கடலோர படைகளின் திறன் அதிகரிக்கப்படும். இடைநிலை மற்றும் குறைந்த தூர தாக்குதல் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு விதிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தடையிலிருந்து விடுபடுவோம். இதற்கு பதிலடி கொடுப்பதற்கான ஆயுதங்கள் தயாரிப்பு திட்டம் இறுதி கட்டத்தில் உள்ளது” என்றார்.





திருச்செங்கோடு

## சிறுமியை வெட்டிய சம்பவம்

# மக்கள் மறியல்

திருச்செங்கோடு அருகே சிறுமியின் கழுத்தை வெட்டியவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனக் கூறுவதை ஏற்க முடியாது எனத் தெரிவித்து பொதுமக்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர். அப்போது சிறுமியின் தந்தை கதறியழுத காட்சி காண்போரின் கண்களில் நீரை வரவழைத்தது.

திருச்செங்கோடு அருகே சக்தி நாயக்கன்பாளையத்தைச் சேர்ந்தவர் செந்தில்குமார். இவர் தன்னுடைய வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமியை கத்தியால் வெட்டியுள்ளார்.

இதைப் பார்த்த செந்தில்குமாரின் தாயார் கூச்சலிடவே, அக்கம் பக்கத்தில் இருந்த தங்கராசு, முத்துவேல் ஆகியோர் செந்தில்குமாரை பிடிக்கமுயன்றபோது அவர்களையும் கத்தியால் தாக்கியுள்ளார்.

படுகாயமடைந்த சிறுமி, தங்கராசு, முத்துவேல் ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஊரக பொலிஸார் செந்தில்குமாரை கைது செய்த நிலையில், அவரை மன நோயாளி எனக் கூறி தப்பிக்க வைக்க முயற்சிப்பதாக சிறுமியின் உறவினர்கள், பொதுமக்கள் திடீரென சாலைமறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்ததைத் தொடர்ந்து சாலைமறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் சிறுமியின் தந்தை கதறியழுத காட்சி காண்போரின் கண்களில் நீரை வரவழைத்தது.

சென்னை

## டிபிஐ வளாகத்தை முற்றுகையிட முயற்சித்ததில்

# 1500 இடைநிலை ஆசிரியர்கள் கைது



பதவி உயர்வு பாதிப்பை ஏற்படுத்தும் அரசாணை 243-ஐ இரத்து செய்வது, மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது, இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை களைவது உள்ளிட்ட 31 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்) தொடக்கக்கல்வி இயக்குநரகம் அமைந்துள்ள டிபிஐ வளாகத்தை 29ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாட்கள் முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என அறிவித்திருந்தது.

## இலங்கைக்கெதிரான

# தொடர் இந்தியா வசமானது





இலங்கைக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, பல்லேகலவில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியாவின் அணித்தலைவர் சூரியகுமார் யாதவ், இலங்கையை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 32 (24), குசல் பெரேராவின் 53 (34), கமிந்து மென்டிஸின் 26 (23) ஓட்டங்களோடு சிறந்த ஆரம்பத்தைப் பெற்றபோதும், மீண்டுமொரு முறை 15 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களுடன் காணப்பட்டு வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து இறுதியில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில் ரவி பிஷ்னோய் 4-0-26-3, அக்ஸர் பட்டேல் 4-0-30-2, அர்ஷ்டீப் சிங் 3-0-24-2, ரியான் பராக் 4-0-30-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா மூன்று பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்ட நிலையில் எட்டு ஓவர்களில் 78 ஓட்டங்கள் வெற்றியிலக்காக இந்தியாவுக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் யஷஸ்வி ஜைஸ்வாலின் 30 (15), சூரியகுமார் யாதவ்வின் 26 (12), ஹர்திக் பாண்டியாவின் ஆட்டமிழக்காத 22 (09) ஓட்டங்களோடு 6.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் மகேஷ் தீக்‌ஷன 2-0-16-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக பிஷ்னோய் தெரிவானார்.

இந்நிலையில் இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.



## நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின்

# புதிய நிர்வாக சபை நியமனம்

■ ஆ. ரமேஸ்

நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் 90ஆவது பொதுக்கூட்டம் நுவரெலியா கூட்டுறவு விடுதியில் ஞாயிற்று கிழமை (28) நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் உறுப்பினர்களும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளத்தின் நிர்வாகப் பிரிவினர் உட்பட நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தில் 2024 ஆம் ஆண்டு அங்கம் வகிக்கும் 27 அணிகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் பங்குபற்றினர்.

இதன்போது நடப்பாண்டுகான நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் புதிய நிர்வாக சபைத் தலைவராக எம்.எஸ் லாபீர் தெரிவு செய்யப்பட்டதுடன், செயலாளராக எஸ். சாந்தனும், பொருளாளராக டீ. அருள்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் உப தலைவர்களாக ஜே. புகனேந்திரன், எஸ். புவேந்திரன், ஏ. டேவிட், வி.எஸ். கார்த்திக், கே. பிரதீபன் ஆகியோரும் உப செயலாளர்களாக பி. சிந்துஜன், எஸ். நிஷாந்தன் ஆகியோரும், உப பொருளாளராக எம். எம். அணாப் தெரிவு செய்யப்பட்டதுடன், பிரதான நிறைவேற்று அதிகாரியாக ஸ்டீபன் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பெல்ஜியம் குரான் பிறீ: வென்ற ஹமில்டன்

பெல்ஜியம் குரான் பிறீயை மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற இப்பந்தய முடிவில் ஹமில்டனின் சக மெர்சிடிஸ் அணியின் ஓட்டுநரான ஜோர்ஜ் ரஸலே வென்றபோதும், பந்தயம் முடிவடைந்த பின்னர் அவரின் காரானது எடை குறைவாகக் காணப்பட்ட நிலையில் அவர் பந்தயத்திலிருந்து தகுதிநீக்கம் செய்யப்படவே இரண்டாமிடம் பெற்ற பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த பிரித்தானியாவின் ஹமில்டன் பந்தயத்தை வென்றவராக அறிவிக்கப்பட்டார்.

அந்தவகையில் பந்தயத்தை ஐந்தாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்ட்ரி இரண்டாமிடம் பெற்றதோடு, பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இதேவேளை இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 277 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் உள்ளார். இரண்டாமிடத்தில் மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் 199 புள்ளிகளுடனும், 177 புள்ளிகளுடன் மொனாக்கோவின் லெக்கலெர்க் மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றனர்.

## பரிஸ் 2024: அரையிறுதிக்கு தகுதிபெற

# தவறினார்





பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளின் பெண்களுக்கான பின்புறமாக நீந்தும் 100 மீற்றர் நீச்சல் போட்டியின் அரையிறுதிப் போட்டிகளுக்கு இலங்கையின் கங்கா செனவிரத்ன தகுதி பெறத் தவறியுள்ளார்.

திங்கட்கிழமை (29) நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளில் முதல் 16 இடங்களைப் பெறுபவர்களே அரையிறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகுவர் என்ற நிலையில், போட்டித் தூரத்தை ஒரு நிமிடம் நான்கு செக்கன்கள் 26 மில்லி செக்கன்களில் பூர்த்தி செய்த செனவிரத்ன 30ஆம் இடத்திலேயே தரப்படுத்தப்பட்டிருந்தார்.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற ஆண்களுக்கான தனிநபர் பூப்பந்தாட்ட குழு ஜி போட்டியொன்றில் மலேஷியாவின் லீ ஸி ஜியாவிடம் 21-14, 21-14 என்ற நேர் செட்களில் இலங்கையின் விரேன் நெட்டசிங்க தோல்வியடைந்திருந்தார். இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள அடுத்த தனது குழு ஜி போட்டியில் ஸ்பெய்னின் பப்லோ அபியானை நெட்டசிங்க எதிர்கொள்கின்றார்.

இந்நிலையில் பெண்களுக்கான 10 மீற்றர் எயார் பிஸ்டல் நிகழ்வில் இந்தியாவின் மனு பாகர் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இதேவேளை பதக்கப் பட்டியலில் 4 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா உள்ளது. 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் ஜப்பானும், தென்கொரியாவும் காணப்படுவதுடன், 4 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது. 3 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் ஐக்கிய அமெரிக்கா காணப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 30, ஜூலை 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.